# இன்று ஆண்டின் பொதுக்காலம் 30ஆம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - B

# 2021-10-24

*(இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எரேமியா நூலிலிருந்து வாசகம்.* 31:7-9,

*பதிலுரைப்பாடல்: திபா.* 126:16,

*எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து வாசகம்.* 5:1-6,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 10: 46-52)

## திருப்பலி முன்னுரை

*இன்று ஆண்டின் பொதுக்காலம் 30ஆம் ஞாயிறு. இந்த ஞாயிறு இறைவழிப்பாட்டிற்கு வந்துள்ள இறைமக்களைக் கிறிஸ்துவின் பெயரால் வாழ்த்தி வரவேற்கிறோம்.*

*இன்றைய வழிபாடு, நம்மைப் பார்க்கும் ஆற்றல் உள்ளவராக வாழ அழைக்கிறது. எனக்குப் பார்க்கும் ஆற்றல் இருக்கிறது என்பவர்கள் எல்லாம் பலவற்றைப் பார்க்காமல் அறியாமல், அல்லது உணராமல் இருக்கின்றார்கள். பார்த்துப் பார்த்துப் பழகிப்போன பல நேர்மையற்ற, நீதியற்ற செயல்பாடுகள் அவர்கன் மனதைப் பாதிக்காமல் இருப்பதே அவர்கள் சரியான பார்வை உள்ளவர்கள் அல்ல என்ற நிலையை உணர்த்திக்கொண்டிருக்கின்றன. எனவே அத்தகையவர்கள் புதிய பார்வை பெற வேண்டும் என இன்றைய வழிபாடு அவர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றது.*

*இயேசுவின் மதிப்பீடுகளை வாழ்வாக்கும் ஒரு அற நெறியாளர், ஒரு நேர்மையற்ற செயல்கண்டு அசைவின்றி இருப்பவரல்ல. அறியாமை இருளில் மயங்கிக் கிடக்கும் மானுடம் விழித்தெழுந்து வீறுநடை போடத் தொடங்க வேண்டும். புதிய புதிய வழிமுறைகளால் மானுட சிதைவை வேறருக்கப் புறப்படவேண்டும். கண்களைத் திறக்கும் இயேசுவின் அருள் நெறியில் வாழ, புதிய சமுதாயம் படைக்க புனிதமான இப் பலியில் பங்கேற்று இறையருள் நாடுவோம்.*

## *விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

***ஞானத்தின் ஊற்றாம் இறைவா,***

*எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், உமது ஞானத்தின் ஆவியால் நிரப்பப்பெற்று, திருச்சபையின் மக்கள் அனைவரையும் ஞானத்தில் வழி நடத்த தேவையான அருளை வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***வாழ்வின் நிறைவே இறைவா,***

*வாழ்வு என்னும் கொடைக்காக உமக்கு நன்றி கூறுகிறேன். இந்த வாழ்வும், நீர் தந்த பணியும் உமக்கு உகந்ததாக இருக்கின்றனவா என்று என்னையே ஆய்வு செய்துகொள்ள நீர் தருகின்ற இந்த அழைப்புக்காக உமக்கு நன்றி கூறுகிறேன். வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் தனித்திருக்கவும், உம்மோடு உரையாடி அதன் வழியாக எனது வாழ்வையும், பணியையும் ஆய்வுக்கு உட்படுத்தவும் எனக்குத் தூய ஆவியின் ஞானத்தை நிறைவாகத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***எங்கள் நம்பிக்கையான எம் இறைவா!***

*நம் குடும்பம், நண்பர்கள், ஏன் இந்த உலகமே நமக்கு எதிராக இருந்தாலும், நாம் கடவுளை இறுகப் பற்றிக்கொண்டால் அவர் எல்லாவற்றையும் நம் சார்பாக மாற்றிப்போடுவார் என்ற மேலான நம்பிக்கையும், மேலானதொன்றுக் கிடைக்கும்போது கீழானதைத் துறக்க வேண்டும் என்ற உயரிய எண்ணங்களைப் பெற வேண்டிய வரங்களைத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***அன்பின் இறைவா!***

*பெரும் தொற்றுநோயால் இன்னலுக்கு உள்ளாகி உடமைகளையும், உறவுகளையும் இழந்துத் தவிக்கும் உலக மக்களைக் கண்நோக்கியருளும். அவர்கள் விரைவில் தங்களின் வாழ்வை நலமுடனும் வளமுடனும் எதிர்கொள்ளத் தேவையான அனைத்து வரங்களையும் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை இறைஞ்சுகிறோம்.*

***நேர்மையின் நாயகனான எம் இறைவா! என் வேண்டுதலை உற்றுக் கேட்பவரே! எம் இறைவா!***

*இன்றைய நவீனக் காலத்தில் உலகில் இவ்வுலக மகுடங்களைத் தேடிக்கொண்டிருக்கும் வேளையில், சிலுவையை மகுடமாகவும், தன் உயிரைப் பிறருக்கு வழங்குவதை வாழ்வின் நோக்கமாகவும் இயேசு முன்வைத்தார் என்பதை உணர்ந்து எம் இளையோர், சிறியோர் ஆகிய அனைவரும் கிறிஸ்தவ வாழ்வின் நெறிகளைப் பின்பற்றி வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***அன்புத் தந்தையே இறைவா!***

*உமது அன்பையும், இரக்கத்தையும் பெற்று மகிழும் எம் இளைஞர்கள் உமது வார்த்தைக்கு மட்டுமே என்றும் பணிந்து உமது சாட்சிகளாய் வாழ அவர்களுக்கு அருள் தந்து அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***உமக்காகக் காத்திருப்போர்க்கு அமைதி அளிக்கும் இறைவா!***

*உம் திருஅவை இன்று சந்திக்கும் சவால்களையும், கொடுமைகளையும், அதற்கு ஏற்படும் அவபெயர்களிலிருந்தும் காத்தருளும். பொறுமையும், அமைதியும் இறுதியில் வெற்றிப் பெறும் என்ற திடமான நம்பிக்கையை எங்கள் உள்ளங்களில் நிலைபெற, உமது ஞானத்தையும் ஆசீரையும் தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்..*

***துன்பங்களை நீக்குபவராம் இறைவா,***

*உலகெங்கும் நீதிக்காகவும், அமைதிக்காகவும் ஏங்கும் உமது மக்களின் துன்பங்களை நீக்கி, அவர்கள் விரும்பும் நீதியும், அமைதியும் நிறைந்த உலகை உருவாக்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*